செ.வெ.எண்: 55 நாள்: 20.03.2017

**பொது மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் இடமாக நீதிமன்றங்கள் திகழ்கின்றன - சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட பொறுப்பு நீதியரசர் செல்வி.வி.எம்.வேலுமணி அவர்கள் தகவல் .**

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரில் பொதுப் பணித்துறையின் சார்பில் ரூ.2.3 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட மாவட்ட உரிமையில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற புதிய கட்டடத்தை சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.ஆர்.சுரேஷ்குமார் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்கடர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள், முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி.டி.வி.தமிழ்ச்செல்வி அவர்கள், மற்றும் மாவட்ட நீதிபதிகள் உள்ளிட்டோர் முன்னிலையில் சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட பொறுப்பு நீதியரசர் செல்வி.வி.எம்.வேலுமணி அவர்கள் 19.03.2017 அன்று திறந்து வைத்தார்கள்.

இந்த மாவட்ட உரிமையில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற புதிய கட்டட திறப்பு விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

தமிழக அரசு நீதித்துறையில் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற வசதிகளை நிறைவேற்ற உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள கீரனூரில் ரூ.2.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட மாவட்ட உரிமையில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற புதிய கட்டட திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டடத்தின் கீழ்தளம் நீதிமன்ற பகுதியாகவும் மேல்தளம் அலுவலக பகுதியாகவும் என இரண்டு தளங்களும் மொத்தம் 12,288 சதுர அடியில் கட்டப்பட்டு வருகிறது. மேலும் இக்கட்டடத்தில் நீதிபதி அறையுடன் கூடிய மாவட்ட உரிமையில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தபால் நிலையம் மற்றும் வங்கி கிளை இயக்குவதற்கு தனிஅறைகள், காணொலி காட்சி மூலம் வழக்கு நடத்த வலைத்தள அறை, அரசு வழக்கறிஞர்கள் அறை, காவலர்கள் காத்திருக்கும் அறை, கைதிகள் வைப்பு அறை, பொருட்கள் மற்றும் வைப்பறைகள், ஆண், பெண் வழக்கறிஞர்களுக்கென தனித்தனி அறைகள், நீதிமன்ற அலுவலக அறை, அரசு பொது வழக்கறிஞர், உதவி அரசு பொது வழக்கறிஞர் அறைகள், சட்ட உதவி மைய அறை, கணினி அறை, நூலக அறை, அலுவலர்கள் ஓய்வறை, வழக்கறிஞர்கள் சங்க அறை, ஒவ்வொரு தளத்திலும் ஆண்,பெண் இருபாலருக்கும் தனித்தனி கழிவறை வசதிகள் போன்ற பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழகத்தில் 89 சதவிகித நீதிமன்றங்கள் சொந்தக்கட்டடத்தில் இயங்கி வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் நீதித்துறைக்கு தமிழக அரசு ரூ.511 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. அதே போன்று கடந்த 9 மாதங்களில் நீதித்துறைக்கு ரூ.346 கோடியை அரசு ஒதுக்கியுள்ளதுடன் 192 நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடம் கட்டி முடிக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கீரனூர் நீதிமன்றத்தைப் போலவே நமது மாவட்டத்திலுள்ள அனைத்து நீதிமன்ற அறைகளும் குளிரூட்டப்பட்ட வசதி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்கடர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்த மாவட்ட உரிமையில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற புதிய கட்டட திறப்பு விழா நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.ஆர்.சுரேஷ்குமார் அவர்கள் பேசியதாவது.

இந்திய அரசியலமைப்புச்சட்டம் நீதியை நிலைநாட்டும் வகையில் நீதித்துறையை உருவாக்கியுள்ளது. நமது நாட்டில் சட்டதிட்டங்கள் மீறப்படும் போதும் மற்றும் தனி நபர் சட்டத்தைக் கையில் எடுக்கும் போதும் நீதித்துறை தலையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்கிறது. இதைப் போல பொதுமக்களுக்கு பயன்படக்கூடிய புதிய சட்டங்களை இயற்றவும், தேவையற்ற சட்டங்களை நீக்கவும் நீதித்துறைக்கு உரிய அதிகாரம் உள்ளது. ஒவ்வொரு

மாவட்டத்திலும் உள்ள வட்டத்தலைநகரங்களில் புதிய உரிமையியல் நீதிமன்றங்களை அமைத்தல், புதிய கட்டிடங்களை கட்டுதல் என்ற தமிழக அரசின் கொள்கை முடிவின்படி, கீரனூரில் புதிய நீதிமன்ற கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் சென்னை உயர்நீதிதமன்ற கட்டடத்ததை போல் முன்மாதிரியாக குளிரூட்டப்பட்ட அறைகளை கொண்ட நீதிமன்றமாகும். குடிமக்களுக்கு உரிமை மறுக்கப்படும்போது நீதிமன்றங்களை உடனடியாக நாடி தீர்வுகான பொது மக்களிடம் விழிப்புணர்வு அதிகரித்துள்ளது. எனவே, சாமானியர்களுக்கும் நீதி கிடைக்கும் வகையில் வழக்குகளை விரைந்து முடிக்க வழக்குரைஞர்களும், நீதித்துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.ஆர்.சுரேஷ்குமார் அவர்கள் பேசினார்.

இந்த மாவட்ட உரிமையில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற புதிய கட்டட திறப்பு விழா நிகழ்ச்சியில் சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட பொறுப்பு நீதியரசர் செல்வி.வி.எம்.வேலுமணி அவர்கள் பேசியதாவது.

பொது மக்களின் உரிமைகள் மறுக்கப்படும்போது தங்களுடைய உரிமைகளை நீதிமன்றங்களை அணுகி பெற்றுக்கொள்கின்றனர். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய இடமாக நீதிமன்றங்கள் திகழ்வதுதான் இதற்கு முக்கியக்காரணம் ஆகும். மக்களுக்கு நீதி வழங்கக்கூடிய நீதிமன்றங்களின் அடிப்படைக்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிற வசதிகளை நிறைவேற்றும் வகையில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தமிழக அரசின் மூலம் புதிய நீதிமன்றக்கட்டடங்கள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் புதிதாக கட்டப்பட்ட மாவட்ட உரிமையில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்ற புதிய கட்டடத்தை திறந்து வைக்கப்பட்டுள்து.நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை விரைந்து முடித்து பொதுமக்களுக்கு உரிய தீர்வு கிடைக்க அனைவரின் ஒத்துழைப்பு அவசியமாகும். அதேபோன்று நீதித்துறையும், அரசும் பல்வேறு நிலைகளில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். பொதுமக்கள் தங்களது பிரச்சினைகளுக்காக முதலில் அணுகக்கூடிய கீழமை நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை விரைவாக விசாரித்து உரிய தீர்வு காண வேண்டும் . மேலும், இந்த நீதிமன்றத்தை வழக்குரைஞர்களும், பொதுமக்களும் நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட பொறுப்பு நீதியரசர் செல்வி.வி.எம்.வேலுமணி அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் ஜெ.லோகநாதன்,இ.கா.ப., தலைமை குற்றவியல் நீதிபதி டி.வி.அனில்குமார், கூடுதல் மாவட்ட நீதிபதி எம். சுமதிசாய்ப்பிரியா, மகளிர் நீதிமன்ற நீதிபதி ஆர். லியாகத்அலி, சார்பு நீதிபதி பி. இந்திராணி, மாவட்ட உரிமையியல் நீதிபதி எஸ். பிரின்ஸ்சாமுவேல்ராஜ், திருமயம் குற்றவியல் நடுவர் ஏ. முகமதலி, கீரனூர் குற்றவியல் நடுவர் பாரதிராஜன், அறந்தாங்கி உரிமையியல் நீதிபதி எஸ். முருகவேல், மாவட்ட வருவாய் அலுவலர் இ.ராமசாமி, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், பொதுப்பணித்துறை கண்காணிப்புப்பொறியாளர் ஜெ. ரபிந்தர், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, கீரனூர் வழக்குரைஞர் சங்கத்தலைவர் சி. மகாலிங்கம், செயலர் ஆர். சிவகுமார், அரசு பொது வழக்குரைஞர் அ. ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**